திருச்சிற்றம்பலம்

# 42ம் திருமுறை மாநாடு 2022




# ஓதும்போட்டிப் பாடல்கள்

**திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்**

**வெளியீடு**

**திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக் குழு**

**ஒலிப்பேழையில் பாடியவர்:**

திருமுறை கலாநிதி, பண்ணிசை திலகம்,

சிவத்திரு **S. வைத்தியநாத தேசிகர்**

ஒலிப்பேழையில் முன்னுரை:

**சிவத்திரு கண்ணா கண்ணப்பன்**

செயலாளர், திருமுறை மாநாடு ஏற்பாட்டுக் குழு

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R1, R2 & R3

**(02-01-2016 க்கும் 01-01-2018 க்கும் இடையே பிறந்தவர்கள்– N/K1/K2)**

(பங்கு பெறுவோர் மூன்று பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண்: காந்தாரம்** தாளம் : **ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

**அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு**
**வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு**
**பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு**
**திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.**

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**திருக்குறுந்தொகை** தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

**நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்**
**நமச்சி வாயவே நானறி விச்சையும்**
**நமச்சி வாயவே நாநவின் றேத்துமே**
**நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.**

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

**ராகம்: மத்தியமாவதி** தாளம் : **ஆதி**

திருச்சிற்றம்பலம்

**உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்**

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R4, R5 & R6

**(02-01-2013 க்கும் 01-01-2016 க்கும் இடையே பிறந்தவர்கள்– P1/P2/P3)**

(பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

திருஞானசம்பந்தர் தேவாரம்

பண்: **சீகாமரம்** தாளம் : ரூபகம்

திருச்சிற்றம்பலம்

**செடியாய வுடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்**
**பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்**
**கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொல்**
**மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே.** 11

திருச்சிற்றம்பலம்

**திருநாவுக்கரசர்** அருளிய தேவாரம்

பண்: **கொல்லி** தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

**சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**
**நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்**
**உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்**
**உலர்ந்தார் தலையிற்பலி கொண்டுழல்வாய்**
**உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்**
**அலந்தேன் அடியேன் அதிகைக்கெடில**
**வீரட்டா னத்துறை அம்மானே.**

திருச்சிற்றம்பலம்

**சுந்தரர்** அருளிய **தேவாரம்**

**பண் : நட்டராகம்** தாளம் **ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

**பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்**
**ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே**
**காடுநல் லிடமாகக் கடுவிருள் நடமாடும்**
**வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே**

திருச்சிற்றம்பலம்

**சேக்கிழார்** அருளிய **பெரியபுராணம்**

ராகம்: **மத்தியமாவதி** தாளம் :ஆதி

திருச்சிற்றம்பலம்

**கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி**
**அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்**
**சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று**
**பொற்புடன் நடம்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.**

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R7, R8 & R9

**(02-01-2010 க்கும் 01-01-2013 க்கும் இடையே பிறந்தவர்கள் P4/P5/P6)**
(பங்கு பெறுவோர் நான்கு பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண்: பழம்பஞ்சுரம்** தாளம்:ஆதி ( **சாப்பு** )

**திருச்சிற்றம்பலம்**

**வேத வேள்வியை நிந்தனை செய்துழல்**
**ஆத மில்லி அமணொடு தேரரை**
**வாதில் வென்றழிக்கத் திரு வுள்ளமே**
**பாதி மாதுட னாய பரமனே**
**ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்**
**ஆலவாயில் உறையும் எம் ஆதியே.**

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரசர்** அருளிய தேவாரம்

**பண் காந்தாரம்:** தாளம் **ரூபகம்**

திருச்சிற்றம்பலம்

**கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்**
**விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை**
**அரவாடச் சடைதாழ வங்கையினி லனலேந்தி**
**இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே.**

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்

ராகம்: மோகனம் **திருவிருத்தம்**

**திருச்சிற்றம்பலம்**

**வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து**
**இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்**
**அணங்கொ டணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற**
**குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.**

**திருச்சிற்றம்பலம்**

**திருப்பூந்துருத்தி நம்பி காடநம்பி அருளிய திருவிசைப்பா**

**பண் ஆனந்தபைரவி** தாளம்: **ஆதி**

திருச்சிற்றம்பலம்

**பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்**
**பருகுதோறு அமுதம் ஒத்தவர்க்கே**
**தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்**
**திருவுரு இருந்தவா பாரீர்**
**சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த**
**தனிமுழு முதலுமாய் அதற்கோர்**
**வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி**
**விடங்கராய் நடம் குலாவினரே.**

திருச்சிற்றம்பலம்

# பிரிவு R10 & R11

(02-01-2006 க்கும் 01-01-2010 க்கும் இடையே பிறந்தவர்கள் **Sec 1- 4**)

(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம்

**பண்: தக்கராகம்** தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

**துணிவளர் திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்**
**பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்**
**அணிவளர் கோலமெலாம்செய்து பாச்சி லாச்சிராமத்து உறைகின்ற**
**மணிவளர் கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே.** 01

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் அருளிய தேவாரம்

**திருத்தாண்டகம்** **விருத்தம்**

திருச்சிற்றம்பலம்

**சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி**
**சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி**
**பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி**
**புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி**
**அங்கமலத் தயனோடு மாலுங் காணா**
**அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி**
**செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி**
**திருமூலட் டானனே போற்றி போற்றி.**

திருச்சிற்றம்பலம்

சுந்தரர் அருளிய தேவாரம்

**பண்: கொல்லி** தாளம் : **சாப்பு**

**திருச்சிற்றம்பலம்**

**தம்மையேபுகழ்ந்து இச்சைபேசினும் சார்வினுந்தொண்டர் தருகிலாப்**
**பொய்ம்மையாளரைப் பாடாதேயெந்தை புகலூர்பாடுமின் புலவீர்காள்**
**இம்மையேதருஞ் சோறுங்கூறையும் ஏத்தலாமிடர் கெடலுமாம்**
**அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே.** 01

**திருச்சிற்றம்பலம்**

## சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு

ராகம்: **ஆனந்தபைரவி** தாளம் :ஆதி

திருச்சிற்றம்பலம்

**சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த**
**தூய்மனத் தொண்டருள்ளீர்**
**சில்லாண்டில் சிதையும் சில தேவர்**
**சிறுநெறி சேராமே**
**வில்லாண்ட கனகத் திரள் மேரு**
**விடங்கன் விடைப்பாகன்**
**பல்லாண்டு என்னும் பதங்கடந் தானுக்கே**
**பல்லாண்டு கூறுதுமே.**

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் அருளிய பெரியபுராணம்

ராகம்: மத்யமாவதி தாளம் :ஆதி

திருச்சிற்றம்பலம்

**அன்பரங் கிருப்ப நம்பர்**
**அருளினால் அளகை வேந்தன்**
**தன்பெரு நிதியந் தூர்த்துத்**
**தரணிமேல் நெருங்க எங்கும்**
**பொன்பயில் குவையும் நெல்லும்**
**பொருவில்பல் வளனும் பொங்க**
**மன்பெரும் செல்வ மாக்கி**
**வைத்தனன் மனையில் நீட**

திருச்சிற்றம்பலம்

# பிரிவு **R12,R13 & R14**

(02-01-2006 க்கு முன் பிறந்தவர்கள்)

(பங்கு பெறுவோர் ஐந்து பாடல்களையும் பயின்று வரவேண்டும்)

1. **விரும்பிய ஒரு தேவாரப்பாடல்**
   **(ஒன்றாம் திருமுறை முதல் ஏழாம் திருமுறை வரை)**
2. **விரும்பிய ஒரு திருவாசகப்பாடல் (எட்டாம் திருமுறை)**
3. **விரும்பிய ஒரு திருவிசைப்பா பாடல்** ( **ஒன்பதாம் திருமுறை)**
4. **விரும்பிய ஒரு திருப்பல்லாண்டு பாடல்** (**ஒன்பதாம் திருமுறை**)
5. **விரும்பிய ஒரு பெரியபுராணப் பாடல்( பன்னிரண்டாம் திருமுறை )**

திருச்சிற்றம்பலம்

# திருப்பதிகப் பாராயணம்

## 01.116 திருநீலகண்ட திருப்பதிகம்

### கொடிமாடச்செங்குன்றூர் (திருச்செங்கோடு)

“அருள்மிகு பாகம்பிரியாள் உடனாகிய அர்த்தநாரீசுவரர்
திருத்தாள் போற்றி போற்றி”

**பண்: வியாழக்குறிஞ்சி**

**திருச்சிற்றம்பலம்**

**அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்.** 01

**காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனிமனத்தால்
ஏவினை யால் எயில் மூன்றெரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்.** 02

**முலைத்தடம் மூழ்கிய போகங்களும் மற்றெவையுமெல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டெமையாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம்.** 03

**விண்ணுலகு ஆள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணியர் என்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடையீர் உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம்.** 04

**மற்றிணை இல்லா மலைதிரண்டன்ன திண் தோளுடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளாது ஒழிவதும் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துஉன் திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம்.** 05

மறக்கும் மனத்தினை மாற்றியெம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்ப்பிழையாத வண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம். 06

( ஏழாம் பாடல் மறைந்து போயிற்று, சிவ சிவ! ) 07

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்தும் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை ஏத்துதும் நாமடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம். 08

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றம் உடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப் பெறா திருநீலகண்டம். 09

சாக்கியப் பட்டும் சமண் உருவாகி உடையொழிந்தும்
பாக்கியம் இன்றி இருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம். 10

பிறந்த பிறவியில் பேணியெம் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்